[2nd November 1966

(இ) அவைகளுள், தீர்வு காணப்பட்ட, நிராகரிக்கப்பட்ட மகஜர்கள் முறையே எத்தனை ?

(உ) இத்திட்டத்தை மேலும் அமுலாக்குவது அல்லது எடுத்து விடுவது குறித்து அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 2,589.

(இ) (i) 2,426.

(ii) 1,537.

(உ) தற்போது செயலிலுள்ள வேலைத் திட்டத்தைக் கைவிடும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. செ. மாதவன் : பொதுவாக சட்ட மன்ற உறுப்பினர்கள் எழுதி அனுப்பக்கூடிய குறைகளைப் பற்றிய மனுக்களுக்கு உடனடியாகப் பதில் அனுப்ப வேண்டுமென்று ராஜாஜி காலத்தில் ஒரு ஜி.ஓ. போடப்பட்டதாகத் தெரிகிறது. அந்த ஜி.ஓ. இப்போது அமலில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த மாதிரி கொடுக்கப்பட்ட மனுக்களுக்குப் பதில் அனுப்ப வேண்டுமென்ற உத்தரவு இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த ஜி.ஓ. சம்பந்தமாகத் தனிக் கேள்வி போட வேண்டும். இதைப் பொருத்தவரை, கலெக்டர்களிடம் கொடுக்கப்பட்ட மனுக்களின்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வட ஆற்காடு மாவட்டத்தில் 'மன்டே பெடிஷன்ஸ்' கொடுக்கப்பட்டு பல திரும்பி வந்து விடுகின்றன. இன்ன மாதிரிக் குறைகளுக்குத்தான் மனுப் போட வேண்டுமென்ற விதி ஏதாவது இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : அப்படி ஒன்றும் இல்லை.

மவுண்ட் ரோட்டிலுள்ள சுரங்கபாதை

* 325 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மவுண்ட் ரோட்டில் அமைக்கப்படுகிற பாதாள சுரங்கத்துக்கு " மதிப்பீடு " தொகை எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமையா : ரூபாய் 13.75 லட்சம்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தப் பாதாளச் சுரங்க வேலைகள் எப்போது முடிவடையும் ? பொதுமக்கள் உபயோகத்திற்கு எப்போது திறக்கப்படும் ?

கனம் திரு. வெ. ராமையா : இதைப் பற்றிய விவரம் இல்லை. விரைவில் வேலை முடிந்து உபயோகத்திற்கு வரும் என்று நினைக்கிறேன்.